**MakkalKural, Coimbatore, Nov 23 2008**

# மாணவ, மாணவிகளுக்கு வினாடி வினா போட்டி: டாடா கன்சல்டன்சி நடத்தியது

கோவை,நவ.22-

கோவை அவினாசி ரோட்டில் உள்ள கோவை தொழில் நுட்ப கல்லூரி (சி.ஐ.டி) கலையரங்கில் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனம் சார்பில், தகவல் தொழில் தொழில்நுட்ப உலகில் ஏற்பட்டு வரும் மாற்றத்தை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளி மாணவமாணவிகளுக்கு இடையே வினாடிவினா போட்டி நடைபெற்றது.

இந்த போட்டியில் கோவை, திருப்பூர், பொள்ளாச்சி, சத்தியமங்கலம், காங்கேயம், ஈரோடு, உடுமலை, மேட்டுப்பாளையம், ஊட்டி, கோத்தகிரி, மற்றும் குன்னூர் பகுதிகளில் இருந்து 70 பள்ளி மாணவமாணவிகள் சுமார் 800 பேர் கலந்து கொண்டனர்.

இறுதிபோட்டியில், ஊட்டி லெய்ட்லா நினைவு பள்ளி, கோவை, ஜி.டி. மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, எஸ்.டி.ஓ மெட்ரிக்பள்ளி, கோவை பெர்க்ஸ் மேல்நிலைப்பள்ளி, சச்சிதானந்த ஜோதி நிகேதன் பள்ளி, மேட்டுப்பாளையம் புனித ஜீட்ஸ் பப்ளிக் பள்ளி ஆகிய பள்ளிகளை சேர்ந்த 12 பேர் கலந்து கொண்டனர். இதில் புனித ஜீட்ஸ் பப்ளிக் பள்ளி முதலிடமும், ஊட்டி லெய்ட்லா நினைவு பள்ளி 2வது இடமும் பெற்றனர்.

நிகழ்ச்சியில் போலீஸ் ஐ.ஜி. சீமா அகர்வால் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு முதலிடம் பெற்ற புனித ஜூட்ஸ் பப்ளிக் பள்ளியைச் சேர்ந்த காலின் பால் ஜாப் மற்றும் ஹரிஸ்தா மேத்தா ஆகியோருக்கு வெற்றி கோப்பை, மற்றும் லேப்டாப் கம்ப்யூட்டர் வழங்கினார். 2வது பரிசு பெற்ற ஊட்டி லெய்ட்லா நினைவு பள்ளியைச் சேர்ந்த அழகப்பன், சிங்கோம்பாசிங்கிதம் ஆகியோருக்கு வெற்றிக்கோப்பை மற்றும் டிவிடி பிளேயர், ஜிட்டல் கேமரா ஆகியவற்றை வழங்கினார். நிகழ்ச்சியில் டாடா கன்சல்டன்சி நிறுவன துணைத்தலைவர் நரசிம்மன் கலந்து கொண்டார்.